**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.</u>**

**முன்னிலை. செல்வி. மு.அபிநயா., B.A. B.L..,**

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

2023–ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25–ம் நாள் வெள்ளிக்கிழமை,
இ.ம.எண். 3/2023 in அ.வ.எண்.28/2010

---------

ஆச்சிக்கண்ணு ...மனுதாரர்/வாதி

/எதிர்/

1. கந்தன்
2. மூக்காயி
3. மணி

... 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

4. ஜெபமாலை
5. குழந்தையம்மாள்
6. விக்டோரியா
7. பாஸ்கர்
8. இளவரசி
9. பிரகதி
10. மைனர் நிவேதா
 தாயார் மற்றும் இயற்கை காப்பாளர்
 8 ம் பிரதிவாதி இளவரசி

... 4 முதல் 10 எதிர்மனுதாரர்கள்/வரவிருக்கும் பிரதிவாதிகள்

இம்மனு 09.08.2023–ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக என் முன்பு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.D.கௌதமன் அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.ரவி அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 10 எதிர்மனுதாரர்களை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், மனு, எதிருரை மற்றும் ஆவணங்களைப் பரிசீலித்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டறிந்தும்,

இதுநாள் வரை, இந்நீதிமன்ற ஆய்விலிருந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்...

**<u>உத்தரவு</u>**

1. மனுதாரரால் இம்மனு உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 6 விதி 17–ன் கீழ் வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதியளித்து உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் வகுமுறை 6 விதி 17 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

3. இருதரப்பும் கேட்கப்பட்டது. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், இவ்வழக்கில் ஜெபமாலை மற்றும் 6 நபர்கள் மேற்படியார்களை இவ்வழக்கில் கூடுதல் பிரதிவாதிகளாக சேர்த்துக்கொள்ள அனுமதிக்கேட்டு தாக்கல் செய்த இ.ம.எண்.2/2021 ல் விசாரணைக்கு பிறகு கடந்த 02.12.2022 ம் தேதி அனுமதிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி இடைக்கால மனுவில் உள்ள மனுதாரர்களை இவ்வழக்கில் கூடுதல் பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை திருத்தம் செய்ய அனுமதி வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் இவ்வழக்கில் ஜெபமாலை மற்றும் 6 நபர்கள் தாக்கல் செய்த இ.ம.எண்.2/2021 ல் கடந்த 02.12.2022 ம் தேதி அனுமதித்து போடப்பட்ட உத்தரவை தொடர்ந்து இத்துடன் தாக்கல் செய்யப்படும் மனுவின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளது போல அசல் வழக்கில் மேற்படி மனு தரப்பினர்களை

கூடுதல் பிரதிவாதிகளாக சேர்த்து வழக்கை திருத்தம் செய்ய அனுமதிக்கப்படாவிட்டால் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஏற்படும் என்றும் அதை பணத்தால் ஈடு செய்ய முடியாது என்றும் எனவே வழக்குரையை திருத்தம் செய்ய அனுமதித்து உத்தரவிட வேண்டியது அவசியமாயும் நியாயமாயுமாக இருக்கிறது என்றும் எனவே மனுதாரரின் இம்மனுவை அனுமதித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

4. 4 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள விவரங்கள் முற்றிலும் பொய்யானவை என்றும் அவற்றை மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் என்றும் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் 1 முதல் 3 பிரதிவாதிகள் எதிர்மனுதாரர்கள் ராஜமாணிக்கம் பெயரில் ஏற்பட்ட 03.02.2010 தேதியிட்ட கிரைய ஆவணம் பற்றி மனுதாரருக்கு ஏற்கனவே தெரியும் என்றும் இவ்வழக்கானது 2010 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட வழக்கு என்றும் மேற்படி ஆவணம் பற்றி தெரிவிப்பதற்கு நாளது தேதி வரை நடவடிக்கை எடுக்காததற்கு எந்தவித காரணமும் மனுதாரர் தரப்பில் குறிப்பிடவில்லை என்றும் மேற்படி ஆவணம் 03.02.2010 அன்று ஏற்படுத்தப்பட்ட ஆவணம் என்றும் விளம்புகை பரிகாரம் கேட்க வேண்டுமென்றால் 02.03.2013 ம் தேதிக்குள் விளம்புகை பரிகாரம் கோரி இருக்க வேண்டும் என்றும் ஆனால் மனுதாரர் மேற்படி ஆவணம் குறித்து எந்த நடவடிக்கையும் எடுக்காத காரணத்தினால் மனுதாரர் கூறியுள்ள பரிகாரம் காலவரம்பு சட்டத்தால் பாதிப்படைகிறது என்றும் எனவே இம்மனுவை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய

வேண்டும் என்றும் மேற்படி காரணங்களுக்காக இம்மனுவை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் 4 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது.

5. 4 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பபில் தாக்கல் செய்துள்ள எழுத்துபூர்வமான வாதுரை தாக்கல் செய்யப்பட்டு 4 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் பின்வரும் தீர்ப்புரைகள் சட்டமேற்கோள் காட்டப்பட்டது.

(i) In the Supreme Court of India, Dahiben Vs. Arvindbhai Kalyanji Bhanusali (GAJRA) (D) THR LRs and others,

(ii) 2005 STPL 14944 Orissa [AIR 2006 ORISSA 1) in the Orissa High Court, Bivas Chandra Samanta, Vs. Hira Alias Madan Biswal and others,

(iii) 2009 STPL 6321 CPC in the Supreme Court of India Abdul Rahim and others, Vs. SK.Abdul Zabar and others.

(iv) 1996 (1) BLJR 94 in the Patna High Court, Mohammad Abuzar Vs. Akbar Iman Saheb and Others,

6. மேலும் 4 முதல் 10 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இலால்குடி, மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.231/2017 ன் வழக்குரை எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

7. மனு, எதிர்மனுவுரை வழக்காவணங்கள் எ.ம.சா.ஆ.1 ஆவணம் பரிசீலனை செய்யப்பட்டன. இவ்வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில் இவ்வழக்கில் 4 முதல் 10 பிரதிவாதிகளை தரப்பினர்களாக சேர்ப்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட இ.ம.எண்.2/2021

அனுமதிக்கப்பட்டதன் பேரில் உரிய திருத்தங்கள் செய்வதற்காக வழக்கானது வாய்தாவிற்காக போடப்பட்டிருந்தது. மேற்கண்ட சூழ்நிலையில் இம்மனுவானது இ.ம.எண்.2/2021ன் விளைவாக மட்டும் தாக்கல் செய்யப்படாமல் வழக்கின் பரிகாரத்தை திருத்துவதற்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் அவ்வாறு வழக்கின் பரிகாரத்தை திருத்துவதற்கு மனுதாரர் தரப்பில் எந்த போதுமான காரணமும் மனுவில் குறிப்பிடவில்லை.

8. மேலும் மேற்படி பரிகாரத்தை திருத்துவதற்கு ஏன் வழக்கு விசாரணை தொடங்குவதற்கு முன்பு மனு தாக்கல் செய்யப்படவில்லை என்பது குறித்து மனுதாரர் தரப்பில் எந்த விளக்கமும் குறிப்பிடவில்லை. எனவே வழக்கின் பரிகாரத்தை திருத்துவதற்காக இம்மனுவை அனுமதிக்க முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. ஆனால் இ.ம.எண்.2/2021ஐ பொருத்து திருத்தங்கள் வழக்குரையில் மேற்கொள்ள வேண்டும். இம்மனு மூலம் மேற்கண்ட திருத்தங்களை மேற்கொள்ள அனுமதித்தால் திருத்தங்கள் மேற்கொள்வதில் எந்த தெளிவும் இருக்காது என்றும் மேற்படி மனு சட்டச்சிக்கல்களை ஏற்படுத்தும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே இ.ம.எண்.2/2021 ஐ பொருத்து திருத்தங்கள் மேற்கொள்ள மனுதாரர் தனியாக மனு செய்து உரிய பரிகாரம் தேடிக்கொள்ள வேண்டும் என்று இந்நீதிமன்றம் கருதுகின்றது. எனவே நீதியின் நலன் கருதி இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

**முடிவாக,** இம்மனுவை தள்ளுபடி செய்து இந்நீதிமன்றம் உத்தரவிடுகின்றது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு 2023–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25–ம் நாள் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/–மு.அபிநயா,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்
இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி – இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்

| வ.எண். | தேதி | ஆவணங்களின் விவரம் |
|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | – | இலால்குடி, மாண்புமிகு மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.231/2017 ன் வழக்குரை – சான்றிட்ட நகல் |

ஒப்பம்/–மு.அபிநயா,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.